**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC.274/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | திருமுருகன் | Prosecution | LW-1 as PW-1 |
| Father Name | கோவிந்தன் | Defence | |
| Village | தென்னங்குடி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 46/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

07.10.2025.

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து கார் பெயின்டிங் கடையில் வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை நான் கொரனா காலத்தில் ஊர் தலைவராக இருந்த சமயத்தில் வேறொரு வேலை காரணமாக காவல்நிலையம் சென்றேன். அப்பபோது காவல் நிலையத்தில் வைத்து காவலர்கள் கேட்டுக்கொண்டதால் போட்டுக்கொடுத்தேன். அந்த கையொப்பங்கள் மட்டும் அசாஆ,1 மற்றும் அசாஆ, 2 ஆக குறீயீடு செய்யப்படுகிறது, போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அன்பழகன் மகன் ரமேஷ் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 03.03.2020 ம் தேதி காலை 10.50 மணிக்கு சொந்த வேலை காரணமாக காவல் நிலையம் சென்ற போது சீர்காழீ காவல் நிலைய குற்ற எண். 74/2020 வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் எங்கள் முன்னிலையில் தாமாக முன்வந்து ஒப்புதல்

வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றாலும் அதன் அடிப்படையில் போலிசார் வழக்கு பொருட்களை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**